மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, ஆரம்ப நாளிலிருந்து சொன்னதையெல்லாம் எங்களுக்குச் சேர்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அப்படி வருமேயானால் அது பிறகு தங்கள் பெயராலே ஒரு புத்தகமாக "திருக்குறள் உரை" என்கின்ற அளவில் வெளிவருவதற்கும் வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் என்னுடைய சொந்த உரையைத்தான் ஒவ்வொரு முறையும் தரவேண்டியிருக்கும்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. குமரி அனந்தன்: சபாநாயகர் அவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்சினையைத் தங்களிடம் கொடுத்திருந்தேன். அதை பற்றித் தங்களுடைய கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த உரிமைப் பிரச்சினையில் தொடர்புடையவர் இந்த அவையினுடைய ஓர் உறுப்பினர் என்ற முறையில் அவரிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. அந்த விளக்கம் பெறப்பட்டதும் அது அவையில் எடுத்துக்கொள்ளப் படும்.

2. கவன ஈர்ப்பு.

கன்னியாகுமரி மாவட்டத்தின் சில பகுதிகளிலுள்ள உணவுப் பங்கீட்டுக் கடைகளில் புழுங்கல் அரிசி கிடைக்காததும் சென்னையில் சில பகுதிகளிலுள்ள மக்களுக்கு உணவுப் பங்கீட்டு அட்டை கிடைக்காததும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மா. சுந்தரதாஸ், செ. நூர்முகமது, அ. இரகுமான்கான் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.